2023

No. of Printed Pages : 5

2023

600525

**6879**

பதிவு எண் | | | | | | | |

**இரண்டாம் ஆண்டு**

# தமிழ்மொழி கற்பித்தல்

கால அளவு : 3 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - I

### பிரிவு - அ

**அனைத்து வினாக்களுக்கும், ஒவ்வொன்றிற்கும் 100 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.** **10x2=20**

1. ‘மருணீக்கியார்’ - இச்சொல்லைப் பிரித்துப் புணர்ச்சி விதி தருக.

2. பாற்குடம் - இத்தொகை நிலைத் தொடரை விரித்தெழுதி, எவ்வகைத் தொகை நிலைத் தொடர் என்பதை எழுதுக.

3. குறிப்பு வினைமுற்று என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

4. ‘‘நிலத்தியல்பான் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு’’
-இக்குறட்பாவின் கருத்தினைக் கூறி அணியோடு பொருத்திக் காட்டுக.

[ திருப்புக

5. சிறுகதை எழுத வகுப்பறையில் மேற்கொள்ளும் பயிற்சிகளைக் கூறுக.

6. ''பேச்சாற்றல், போர் ஆற்றலினும் போற்றத்தக்கது'' என்பதனை உணர்த்தும் திருக்குறளினை எழுதுக.

7. கற்பனை என்றால் என்ன ? அதன் வகைகளைக் கூறுக.

8. மதிமுகம் வந்தாள் - இத்தொடரில் வரும் தொகையினைக் கூறி, அத்தொகைச் சொல்லிற்கான இலக்கணத்தையும் கூறுக.

9. ''போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
வார லென்பபோல் மறித்துக் கைகாட்ட''
- என்ற அடிகளில் குறிப்பிடப்படும் அணியினை விளக்கிக் கூறுக.

10. இருபெயரொட்டுப் பண்புத்தொகையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

## பிரிவு - ஆ

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.** 5x4=20

11. காண்டகு, சேவடி இவற்றினை பிரித்தெழுதிப் புணர்ச்சி விதியுடன் விளக்குக.

12. தொகாநிலைத் தொடர் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

13. ''அள்ளற் பழனத்(து) அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட தெனவெரீஇ - புள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு''.
-இப்பாடல் உணர்த்தும் பொருளை விளக்கி, அருஞ்சொற்பொருளை எடுத்தெழுதுக.

14. கீழ்க்காணும் உரைநடைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

அழியாச் செல்வத்தையே அடைய வேண்டுமென்னும் அவா நம்மெல்லாரிடத்தும் இயற்கையாக இருந்தாலும், முத்துச் சிப்பியில் உள்ள முத்தின் ஒளியும், பாசி மூடிய பவளத்தின் நிறமும், பாசியில் மறைந்த மதியின் துலக்கமும், கூடை கவிழ்ந்த விளக்கின் ஒளியும்போல் நம்மை மூடிக் கொண்டிருக்கும் அறியாமை என்னும் இருளில் அகப்பட்டவர்களாகி நாம் அறிவை இழந்து அழியாச் செல்வத்தை அடைய முயலாமல், நிலையின்றி அழிந்துபோகும் பொருள்களையே நிலையாகப் பிழைபட நினைந்து, அவற்றைப் பெறுவதிலும் அவற்றை நுகர்வதிலுமே நமது காலத்தைக் கழித்து வருகின்றோம்.

(1) இப்பத்தியின் மையக் கருத்து யாது ?

(2) இப்பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ள உவமைகள் யாவை ?

(3) இப்பகுதியிலுள்ள அருஞ்சொற்களை எழுதுக.

(4) இப்பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ள அழகிய தொடர்கள் யாவை ?

15. ‘‘மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்

வன்மைக் கினமாத் திரிபவு மாகும்’

-இந்நூற்பாவை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

16. ‘தேன்’ என்னும் சொல்லின் முன் மூவின மெய்களும் எவ்வாறு புணர்ந்து வரும் ? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

17. உவமையணிக்கும், எடுத்துக்காட்டுவமையணிக்கும் உள்ள வேறுபாட்டினை எடுத்துக்-காட்டுடன் விளக்குக.

18. மேடையில் பேசும்போது மனத்திற் கொள்ள வேண்டியவை யாவை ?

[ திருப்புக

## பகுதி - II

## பிரிவு - அ

**அனைத்து வினாக்களுக்கும், ஒவ்வொன்றிற்கும் 100 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.**

**10x2=20**

**19.** ஒரு நாட்டின் கல்வி அமைப்பிற்கான குறிக்கோள்கள் யாவை ?

**20.** அரசன் என்னும் சொல்லுக்குரிய அறிந்த சொற்கள் மற்றும் பயன்படுத்தும் சொற்களை எழுதுக.

**21.** மாணவர்கள் இலக்கியங்களை எத்தகைய நோக்கத்தோடு படிக்க வேண்டும் ?

**22.** வெண்பா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

**23.** பிழை, தவறு – வேறுபடுத்திக் காட்டுக.

**24.** ''அது நமக்கு அடுப்பு எரியப் பயன்படும்''

-இச்சொற்றொடரில் ஏற்பட்ட பிழைக்கான காரணத்தைக் கூறி, பிழையின்றி எழுதுக.

**25.** ஒற்றுப் பிழைகளைக் களைய வகுப்பறையில் நீவிர் மேற்கொள்ளும் பயிற்சிகளைக் கூறுக.

**26.** இணையத் தொடர்பினைப் பெற எவையெவைகளை ஒன்றிணைக்க வேண்டும் ?

**27.** தமிழ் இணைய மாநாடு குறித்து எழுதுக.

**28.** மதிப்பீடு என்றால் என்ன ? தற்போது பள்ளிகளில் எத்தகைய மதிப்பீட்டு முறை பின்பற்றப்பட்டு வருகிறது ?

## பிரிவு - ஆ

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு, ஒவ்வொன்றிற்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.** **5x4=20**

29. பாடநூலின் அமைப்பு எவ்வாறு இருக்க வேண்டும் ?

30. நாற்குணம், ஐம்புலன் - தொகைச் சொற்களை விரித்து எழுதுக.

31. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொல்லை எழுதுக.
    ஆஸ்தி, கோஷ்டி, நாஷ்டா, நமஸ்காரம்

32. உறவுமுறைக் கடிதம் எழுதும் படிநிலைகளை விளக்குக.

33. சந்திப்பிழைகளைத் தவிர்க்க நீவிர் எத்தகையப் பயிற்சிகளை வழங்குவீர் ?

34. மாணவர்களிடம் காணப்படும் எழுத்துப் பிழைகளைக் களைய எத்தகைய நடவடிக்கை-களை மேற்கொள்வீர் ?

35. தமிழ் இணையப் பண்பாட்டுச் செய்திகளைக் கொண்டு தமிழ்மொழிச் சிறப்பினை எவ்வாறு மேம்படுத்துவாய் ?

36. தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்கள் பற்றி எழுதுக.

## பகுதி - III

**ஒவ்வொரு வினாவிற்கும் 500 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.** **2x10=20**

37. (அ) பேராசிரியர் தவே தலைமையில் உருவாக்கப்பட்ட ஐந்தாம் வகுப்பு மொழிப் பாடத்திற்கான திறன் பகுதி, திறன்களை, நடைமுறையிலுள்ள ஐந்தாம் வகுப்புத் திறன் பகுதிகளோடு ஒப்பிடுக.

**அல்லது**

(ஆ) மாணவர்களிடம் படைப்பாற்றலை பெருக்கும் உத்திகள் குறித்து எழுதுக.

38. (அ) கணினியில் பயன்படுத்தப்படும் தமிழ் மென்பொருள்கள் பற்றி விளக்கி எழுதுக.

**அல்லது**

(ஆ) புறவயத்தேர்வு அமைக்கும் முறையை விளக்கி அதன் நிறை குறைகளை எழுதுக.

-oOo-